Clear Copy

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*******

ஆணை எண். 10/ந/2020
நாள். 14.02.2022

திருமதி.S.கலாவதி,
அரியலூர். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
அரியலூர் நகராட்சி. – எதிர்மனுதாரர்

அரியலூர் மாவட்டம், பெருமாள்கோயில் தெரு, எண்.5 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி.S.கலாவதி என்பவரின் 08.01.2020 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.01.2020 அன்று பெறப்பட்டு, 10/ந/2020 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

அரியலூர் மாவட்டம், பெருமாள்கோயில் தெரு, எண்.5 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி.S.கலாவதி என்பவர் தமது மனுவில் 2018 – 2019 மற்றும் 2019 – 2020 ஆண்டின் வீட்டு வரி செலுத்த சென்ற போது குப்பை வரி இவ்வளவு என்று ஒரு சிறிய தாளில் எழுதி கொடுத்து கட்ட சொன்னார்கள். குப்பை வரியின் அளவு அதிகம் என்பதால் தங்களின் மேலான ஆய்வுக்கும் அதன் வழியாக தங்களின் அறிவுறுத்தலின் பேரில் வரி கட்டவும் இம்மனுவை சமர்ப்பித்துள்ளேன். இதில் வீட்டு வரி கட்டிய ஆண்டுக்கும் இப்போது குப்பை வரி போட்டுள்ளனர். வீட்டு வரி வருடத்திற்கு ரூ.2,496/– மற்றும் குப்பை வரி ரூ.6,000/– என்றால் வருத்தமாக இருக்கிறது. அதிமாகவும் உள்ளது. இதனுடன் அவர்கள் எழுதி கொடுத்த சீட்டின் பிரதியையும் இணைத்துள்ளேன். ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

2. இம்மனு தொடர்பான அறிக்கையை அனுப்பி வைக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தின் 20.01.2020 நாளிட்ட கடிதம் வாயிலாக அரியலூர் நகராட்சி ஆணையாளர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

"அரியலூர் நாகராட்சி ஆணையர் தனது 31.01.2020 நாளிட்ட அறிக்கையில், மனுதாரர் திருமதி.எஸ்.கலாவதி என்பவர் வீட்டுவரி செலுத்த சென்றபோது குப்பைவரி இவ்வளவு செலுத்த வேண்டும் என்று சிறிய தாளில் எழுதி கொடுத்து கட்ட சொன்னதாக தெரிவித்து உள்ளார்கள். ஆனால் இவர் எப்போது நகராட்சி அலுவலகம் வந்து எந்த பிரிவு அலுவலரிடம் விபரம் கேட்டு எழுதி வாங்கினார் அந்த நபரின் பெயர் விபர தகவலை முழுமையாக தெரிவிக்கவில்லை.

திருமதி.எஸ்.கலாவதி, அவர்கள் எந்த சொத்துக்குரிய வரிவிதிப்பு எண்ணுக்கு வரி செலுத்த வந்துள்ளார் என்ற விபரத்தினை மனுவில் தெரிவிக்காததோடு தனது சொத்து குறித்தான முழுமையான வரிவிதிப்பு விபரங்களை தெரிவிக்கவில்லை என கூறியுள்ளார்.

மேலும், மனுதாரரின் புகார் தொடர்பாக புகார் மனுவில் இணைத்துள்ள நகல் ஆவணங்களில் உள்ள தகவல்களின் அடிப்படையில் விபரங்கள் சரி பார்க்கப்பட்டு கீழ்குறிப்பிட்டுள்ளவாறு வரி விதிப்பு எண்கள் மனுதாரர் பெயரில் உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

1) 090/015/00775 என்ற வரி விதிப்பு எண்ணுக்குரிய சொத்து திருமதி.எஸ்.கலாவதி, 35, பெருமாள் கோவில் தெரு, அரியலூர். மற்றும்
2) 090/015/00776 என்ற வரி விதிப்பு எண்ணுக்குரிய சொத்து திருமதி.எஸ்.கலாவதி, 35–ஏ, பெருமாள் கோவில் தெரு, அரியலூர்.

மேலும், மேற்படி இரண்டு வரி விதிப்பு எண்களுக்கான சொத்துக்கள் வணிக உபயோகத்தின் அடிப்படையில் (Commercial Purpose) மருத்துவமனைக்கு உரியதாகும். இவ்வரிவிதிப்பு தொடர்பாக மனுதாரரிடமிருந்து எழுத்துபூர்வமான முறையீடு வரப்பெற்று பரிசீலிக்கப்பட்டு வந்த நிலையில் அரசாணை எண்.150, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்.19.11.2019 ன்படி 01.04.2018 முதல் உயர்த்தப்பட்ட வரி தொகைகள் நிறுத்தம் செய்யப்பட்டு பழைய வரிதொகையே வசூல் செய்யப்பட்டு வருகிறது. கேட்பு அறிவிப்பில் கண்டுள்ளபடி திடக்கழிவு பயனீட்டாளர் கட்டணம் (Solidwaste Management User Charges) சுற்றுப்புற சூழல் பாதுகாப்பு சட்டம் 1986 (சட்ட எண் 29/1986)ல் பிரிவு 3, 6 மற்றும் 25–ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் மத்திய அரசின் திடக்கழிவு மேலாண்மை பணிகளை முறைப்படுத்த, திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ஐ இயற்றியுள்ளதன்

அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு உட்பட்ட பகுதிகளில் மேற்படி துணை விதிகளை அமுல்படுத்தி சுற்றுப்புறத்தினை தூய்மையாக பராமரிப்பதற்கு, அதற்கான திடக்கழிவு பயனீட்டாளர் கட்டணங்களை சொத்துவரியுடன் சேர்த்து வசூல் செய்யப்பட்டு வருகிறது. இதற்கான துணை விதிகள் அரியலூர் நகர் மன்ற தீர்மான எண்.48 நாள் 06.03.2017ல் அனுமதி பெற்று, 24.04.2017 அன்றைய தேதிய அரியலூர் மாவட்ட அரசிதழில் சிறப்பு வெளியீடாக பொதுமக்கள் பார்வைக்கு வெளியிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் புகார்தாரரின் மருத்துவமனைக்கு திடக்கழிவு பயனீட்டாளர் கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ.500/– வீதம் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டுதான் விதிக்கப்பட்டுள்ளது'' என்று தெரிவித்துள்ளார்.

3. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான அரியலூர் நகராட்சி ஆணையாளர் ஆகியோரை 21.04.2021 அன்றைய நேரடி விசாரணைக்கு இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகுமாறு 17.03.2021 ல் அழைப்பாணை அனுப்பப்பட்டது. மனுதாரர் திருமதி.S.கலாவதி 21.04.2021 அன்றைய நேரடி விசாரணையில் கலந்து கொண்டு கீழ்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்:

''அரியலூர் மாவட்டம், அரியலூர் நகராட்சி பெருமாள் கோயில் தெரு, எண்.35ஏ–வில் அமைந்துள்ள என்னுடைய வீட்டிற்கும், அதே முகவரியில் எண். 35 ல் அமைந்துள்ள என்னுடைய மருத்துவமனைக்கும் குப்பை வரி என்கின்ற பெயரில் வருடத்திற்கு தலா ரூ.6,000/– என அரியலூர் நகராட்சியால் எங்களிடமிருந்து வசூல் செய்யப்பட்டு வருகிறது. ஆனால், எனது வீட்டிற்கு அருகே உள்ள மற்ற அனைத்து வீடுகளிலும் குப்பை வரி என வருடத்திற்கு ரூ.50/– அல்லது 100/– மட்டும் தான் வசூலிக்கப்பட்டு வருகிறது. எனது மருத்துவமனைக்கென குப்பை வரியாக ரூ.6,000/–ம் மற்றும் மருத்துவமனையில் சேரும் மருத்துவக் கழிவுகளை அகற்றுவதற்கு வருடந்தோறும் ஒரு குறிப்பிட்ட தொகையை நான் செலுத்தி வருகிறேன். எனவே, மேற்கண்ட எனது வீட்டிற்கு வசூலிக்கப்படும் குப்பை வரி தொகையான ரூ.6,000/–ஐ குறைத்து, மற்ற வீடுகளில் வசூலிக்கப்படும் தொகையைப் போன்றே வசூல் செய்திட ஆவன செய்யுமாறும், அதே போன்று எனது வீட்டிற்கும், வீட்டையொட்டி உள்ள எனது மருத்துவமனைக்கும் வீட்டு வரி மற்றும் குடிநீர் வரியும் அதிகப்படியாக நகராட்சியால் வசூலித்து வருகின்றனர். அதனையும் சட்டத்திற்கு உட்பட்டு குறைத்திட ஆவன செய்யுமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

4. அரியலூர் நகராட்சி ஆணையாளர் 21.04.2021–ல் நேரடி விசாரணைக்கு ஆஜராகாததால், அவருக்கு 29.07.2021 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 07.07.2021 ல் அழைப்பாணை அனுப்பப்பட்டது. 29.07.2021 ல் விசாரணையில் கலந்து கொண்ட அரியலூர் நகராட்சி ஆணையாளர் கீழ்கண்டவாறு தமது வாக்குமூலத்தை சமர்பித்தார்:

“அரியலூர் மாவட்டம், அரியலூர் நகராட்சி பெருமாள் கோயில் தெரு எண்.35 மற்றும் 35ஏ–ல் வசிக்கும் டாக்டர் திருமதி.S.கலாவதி என்பவர் தனது வீட்டையொட்டியே தனது மருத்துவமனையையும் வைத்துள்ளார். மேற்கண்ட மருத்துவமனைக்கு பத்து ஆண்டுகளுக்கு முன்பே இரண்டு வணிகவரி விதிப்புகள் விதிக்கப்பட்டுள்ளது. ஆனால், மேற்கண்ட மருத்துவமனை கட்டடத்தில் முதல் தளத்தை இரு பிரிவுகளாக பிரித்து, அதில் முதல் பிரிவை அறுவை சிகிச்சைப் பிரிவாகவும், இரண்டாவது பிரிவை தனது குடியிருப்பாகவும் மாற்றம் செய்து அதற்கான வரிகளை விதிக்குமாறு இம்முறைமன்றத்தில் மனு சமர்பித்துள்ளார். ஆனால் அரியலூர் நகராட்சியில் மேற்கண்ட பொருள் தொடர்பாக எவ்வித மனுவும் எழுத்துபூர்வமாக மனுதாரரால் சமர்பிக்கப்படவில்லை.

மேற்கண்ட மனுதாரர் தற்போது உள்ள மேற்கண்ட மருத்துவமனை கட்டிடத்திற்கு ஏற்கனவே வரி செலுத்தி வருவது போன்று, நடப்பு காலம் வரை (upto 2021–22) வரியை செலுத்திவிட்டு உரிய விண்ணப்பத்துடன் நகராட்சியை அணுகும்போது, மனுதாரரின் மனுவினை பரிசீலித்து விதிகளுக்கு உட்பட்டு, உரிய வரியை நகராட்சிக்கு செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுவார் என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தின் முன் எனது வாக்குமூலமாக சமர்பிக்கின்றேன்.

மேலும், மனுதாரர் மேற்கண்ட மருத்துவமனைக்கு கட்டட அனுமதி பெறும்போது அக்கட்டடத்திற்கு சிறப்பு ஒப்புதல் / வணிக பயன்பாடு அல்லது குடியிருப்பு பயன்பாடு ஆகியவற்றில் எத்தகைய பயன்பாட்டிற்கு ஒப்புதல் பெற்றுள்ளார் என்பதை நகராட்சியில் உள்ள பதிவேடுகளை ஒப்பீடு செய்து அதன் அடிப்படையில் மேற்கண்ட வரி விகிதத்தை மாற்ற இயலுமா அல்லது இயலாதா என்கின்ற விவரத்தையும், இயலும் என்றால் மனுதாரரிடம் மேற்கண்ட மருத்துவமனை கட்டிடத்திற்கு ஏற்கனவே வரி செலுத்தி வருவது போன்று நடப்பு காலம் வரையிலான (upto 2021–22) வரியை மனுதாரர் செலுத்திய பின், உரிய விண்ணப்பத்தினை மனுதாரர் அளிக்கும்போது, அதனை விதிகளுக்கு உட்பட்டு பரிசீலித்து, வரிவிதிப்பு செய்யப்படும் என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தின் முன் எனது வாக்குமூலமாக பதிவு செய்கிறேன். மேலும், கட்டட அனுமதி குறித்த நகலையும், அது குறித்த விவரத்தையும் 05.08.2021 க்கு முன் நடுவர் ஆணையத்திற்கு அனுப்பிவிடுகிறேன் எனவும் உறுதி அளிக்கிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

5. மேற்கண்ட ஆணையரின் வாக்குமூலத்துற்கேற்ப, தற்போதைய ஆணையர் கூடுதல் விவரங்களுடன் 28.01.2022 நாளிட்ட தனது அறிக்கையை அனுப்பியுள்ளார். ஆணையாளரின் மேற்கண்ட அறிக்கையில் பின்வரும் விவரங்களை தெரிவித்துள்ளார்:

திருமதி.S.கலாவதி அவர்களின் சொத்துக்கள் குறித்த வரிவிதிப்புகள் ஆவணங்களில் கீழ்கண்டவாறு உள்ளது.

1. திருமதி.எஸ்.கலாவதி, 35, பெருமாள் கோவில் தெரு, அரியலூர் என்பவரின் வரிவிதிப்பு எண். 090/015/00775 (வணிக பயன்பாடு வரிவிதிப்பு பில் உள்ளது)

2. திருமதி.எஸ்.கலாவதி, 35ஏ, பெருமாள் கோவில் தெரு, அரியலூர் என்பவரின் வரிவிதிப்பு எண். 090/015/00776 (வணிக பயன்பாடு வரிவிதிப்பு பில் உள்ளது)

6) மேற்படி இடத்தினை இந்நகராட்சி வருவாய் ஆய்வாளர் மூலம் நேரடி ஆய்வு செய்யப்பட்டதில் அதன் தரை தளம் 2737 சதுர அடியாக மருத்துவமனையும், முதல் தளத்தில் 1332 சதுர அடி குடியிருப்பாகவும் மற்றும் 1403 சதுர அடிகள் ஆப்ரேசன் தியேட்டராகவும் செயல்பட்டு வருகிறது. மேலும், மருத்துவமனை உரிமையாளர் அவர்கள் (கடந்த பத்தாண்டுகளுக்கு முன்பே) வரி விதிக்கும் போது முதல் தளம் வணிக வளாகம் சார்ந்ததாக வரிவிதிப்பு செய்துள்ளார்கள். அதன்பின், சில ஆண்டுகள் கழித்து முதல் தளத்தில் பாதி வீடாக மாற்றியமைத்துள்ளார்களே தவிர இவ்வரிவிதிப்பு தொடர்பாக மனுதாரரிடமிருந்து எழுத்து பூர்வமாக முறையீடு ஏதும் நகராட்சிக்கு வரப்பெறவில்லை. கேட்பு அறிவிப்பில் கண்டுள்ளப்படி திடக்கழிவு பயனீட்டாளர் கட்டணம் (Solidwaste Management User Charges) சுற்றுப்புற சூழல் பாதுகாப்பு சட்டம் 1986 (சட்ட எண் 29/1986) ல் பிரிவு 3, 6 மற்றும் 25 களில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் மத்திய அரசின் திடக்கழிவு மேலாண்மை பணிகளை முறைப்படுத்த திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 ஐ இயற்றியுள்ளதன் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு உட்பட்ட பகுதிகளில் மேற்படி துணை விதிகளை அமுல்படுத்தி சுற்றுப்புறத்தினை தூய்மையாக பராமரிப்பதற்கு அதற்கான திடக்கழிவு பயனீட்டாளர் கட்டணங்களை சொத்துவரியுடன் சேர்த்து வசூல் செய்யப்பட்டு வருகிறது. இதற்கான துணை விதிகள் அரியலூர் நகர் மன்ற தீர்மான எண்.48, நாள் 06.03.2017ல் அனுமதி பெற்று 24.04.2017 அன்றைய தேதிய அரியலூர் மாவட்ட அரசிதழில் சிறப்பு வெளியிடாக பொதுமக்கள் பார்வைக்கு வெளியிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் புகார்தாரரின் மருத்துவமனைக்கு திடக்கழிவு பயனீட்டாளர் கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ.500/– வீதம் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டுதான் விதிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட இரண்டு சொத்து வரி விதிப்புகளும் வணிக உபயோகத்தின் அடிப்படையில் குப்பை வரி விதிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் கூறுவது போல், ஒன்று குடியிருப்பு வரி என்றோ மற்றொன்று வணிக வரி பயன்பாடு என்றோ வரி விதிக்கப்படவில்லை. மேலும் இது தொடர்பான விசாரணையின் போது மேற்படி மருத்துவமனையின் கட்டிட அனுமதி நகல் வழங்க பணிக்கப்பட்டதில் மேற்படி கட்டிட நகல் இவ்வலுவலகத்தில் கிடைக்கப் பெறவில்லை என்ற தகவல் தெரிவிக்கப்படுவதோடு, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அலுவலகத்தில் பணித்தவாறு அரியலூர் நகராட்சி ஆணையர் அவர்கள் 22.01.2022 அன்று நேரில் மருத்துவ மனையினை ஆய்வு செய்து மனுதாரரையும் விசாரித்ததில், மேற்படி மருத்துவமனையானது அரியலூர் பேரூராட்சியாக இருந்த காலத்தில் குடியிருப்பு என்று தரைதளம் மற்றும் முதல் தளத்திற்கு மட்டும் கட்டிட அனுமதி பெறப்பட்டு கட்டப்பட்டுள்ளது. மூன்று வருடங்கள் கழித்து அக்குடியிருப்பினை தனியார் மருத்துவமனையாக மாற்றியதில்

அதற்கேற்றார் போல் வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது தெரிய வந்தது. மேலும் நகராட்சி ஆணையரை மனுதாரர் முதல் தளத்தை பார்வையிட அனுமதிக்கவில்லை என்ற விவரமும் தெரிவித்துக்கொள்வதுடன், தற்போது மேற்படி மருத்துவமனையின் இரண்டாம் தளம் நகராட்சியின் அனுமதி பெறாமல் கட்டப்பட்டுள்ளதோடு, அதன் பயன்பாடு குறித்த விவரமும் தெரியவில்லை, இது தொடர்பாக மனுதாரரை விசாரித்த போது முரணான தகவல்களை தெரிவித்துள்ளார் என குறிப்பிட்டு, மருத்துவமனை தொடர்பான புகைப்படங்களையும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்திற்கு நகராட்சி ஆணையர் அனுப்பியுள்ளார்.

7) இந்நேர்வில் மனுதாரரின் மனு அவரது வாக்குமூலம் மனுதாரர் அனுப்பிய வரைபடம் மற்றும் அரியலூர் நகராட்சி ஆணையாளரின் அறிக்கைகள் மற்றும் அவரது வாக்குமூலம் புகைப்படங்கள் ஆகியவைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

- மனுதாரர் தமது மனுவில் தான் வீட்டு வரி செலுத்த சென்றபோது குப்பை வரி இவ்வளவு என்று ஒரு சிறிய தாளில் எழுதிகொடுத்து கட்ட சொன்னதாகவும் அது அதிகம் என்றும் தெரிவித்துள்ளார். வரிசெலுத்தக் கூறிய அலுவலர் யார் என்றும் எந்த தேதியில் சொன்னார் என்றும் குறிப்பிடவில்லை, வரித்தொகையை கணக்கிட்டு எழுதி கொடுத்த சீட்டின் பிரதியை இணைத்துள்ளார்.
- மனுதாரர் தமது வீட்டிற்கு கட்டிட அனுமதி பெற்றாரா என்பதற்கும் வணிக பயன்பாட்டிற்கு பெற்றாரா அங்கு குடியிருப்பு பயன்பாட்டிற்கு பெற்றுள்ளாரா என்பதற்கான ஆதார ஆவணங்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்க கோரியபோது, அரியலூர் பேரூராட்சியால் அங்கீகரித்து வழங்கப்பட்ட 14.05.1996 நாளிட்ட வரைபடத்தின் நகலினை இம்முறைமன்றத்தில் சமர்பித்துள்ளார். அவ்வரைபடத்தை ஆராய்ந்ததில், அது குடியிருப்பிற்கான வரைபடமாக முன்னாள் அரியலூர் பேரூராட்சியால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
- திருமதி.S.கலாவதி அவர்களின் சொத்து குறித்த வரிவிதிப்பு ஆவணங்களில்,
  1) திருமதி.எஸ்.கலாவதி, 35, பெருமாள் கோவில் தெரு, அரியலூர் என்பவரின் வரிவிதிப்பு எண். 090/015/00775 (வணிக பயன்பாடு வரிவிதிப்பு பில் உள்ளது),
  2) திருமதி.எஸ்.கலாவதி, 35ஏ, பெருமாள் கோவில் தெரு, அரியலூர் என்பவரின் வரிவிதிப்பு எண். 090/015/00776 (வணிக பயன்பாடு வரிவிதிப்பு பில் உள்ளது) என உள்ளது.
- மேற்படி இடத்தினை நகராட்சி வருவாய் ஆய்வாளர் மூலம் நேரடி ஆய்வு செய்யப்பட்டதில் அதன் தரை தளம் 2737 சதுர அடியாக மருத்துவமனையும், முதல் தளத்தில் 1332 சதுர அடி குடியிருப்பாகவும் மற்றும் 1403 சதுர அடிகள் ஆப்ரேசன் தியேட்டராகவும் செயல்பட்டு வருவதை அறியமுடிகிறது. மேலும், மருத்துவமனை உரிமையாளர் அவர்கள் (கடந்த பத்தாண்டுகளுக்கு முன்பே) வரி விதிக்கும் போது முதல் தளம் வணிக வளாகம் சார்ந்ததாக வரிவிதிப்பு செய்துள்ளார்கள்.

- அதன்பின், சில ஆண்டுகள் கழித்து முதல் தளத்தில் பாதி வீடாக மாற்றியமைத்துள்ளார்களே, தவிர இவ்வரிவிதிப்பு தொடர்பாக மனுதாரர் நகராட்சிக்கு எழுத்து பூர்வமாக முறையீடு செய்யவில்லை. எனவே மேற்கண்ட இரண்டு சொத்துவரி விதிப்புகளும் வணிக பயன்பாட்டின் அடிப்படையில் குப்பை வரிவிதிக்கப்பட்டுள்ளது என்பது ஆணையரின் அறிக்கையின் வாயிலாக தெரிய வருகிறது.

8) எனவே, திடக்கழிவு பயனீட்டாளர் கட்டணம் (Solidwaste Management User Charges) சுற்றுப்புற சூழல் பாதுகாப்பு சட்டம் 1986 (சட்டம் 29/1986) ல் பிரிவு 3, 6 மற்றும் 25 களில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் திடக்கழிவு பயனீட்டாளர் கட்டணங்களை சொத்துவரியுடன் சேர்த்து வசூல் செய்யப்பட்டு வருகிறது என்ற ஆணையாளரின் அறிக்கையினை ஏற்று இம்மனுவின் மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மேலும் மனுதாரர் மேற்படி மருத்துவமனையின் இரண்டாம் தளம் நகராட்சியின் அனுமதி பெறாமல் கட்டப்பட்டுள்ளதோடு, அதன் பயன்பாடு குறித்த விவரம் தெரியவில்லை என்று ஆணையாளர் தெரிவித்திருப்பதை ஏற்க மறுக்கும் இம்முறைமன்றம் கட்டடத்தை ஆய்வு செய்து இரண்டாம் தளத்திற்கு கட்டட அனுமதி பெறப்பட்டுள்ளதா எனவும் வரிவிதிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்யமாறும், அவ்வாறு கட்டிட அனுமதி பெறப்படவில்லை எனும் நிலையில் உரிய சட்டவிதிகளின்படி மேல் நடவடிக்கையை தொடர நகராட்சி ஆணையரை இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்துகிறது.

2022 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 14–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திருமதி.S.கலாவதி,
எண்.5, பெருமாள் கோயில் தெரு,
அரியலூர்.

2) ஆணையாளர்,
அரியலூர் நகராட்சி, அரியலூர்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

செயலாளர்